**சுதந்திரத்திற்கு பின்னரான அரசியலமைப்புகளும் சிறுபான்மையினரின் நிலைமைகளும் (பாகம் - 18)**

# காணி அதிகாரங்களும் சட்டத்தில் இருக்கின்றன அமுலில் இல்லை

**(சட்டத்தரணி கனக நமநாதன் LL.B.)**

**காணி அதிகாரங்கள் மிகவும் நிதானமாக கையாளப்பட வேண்டியவை.**

**அரச காணி பகிர்தல் சம்பந்தமாக நிர்வகிக்கும் அதிகாரம் மாகாண சபைக்கு 13வது திருத்தச் சட்டத்தின்படி எந்தளவுக்கு இருக்கின்றது என்பது பற்றி இங்கு ஆராய்வோம்.**

மாகாண சபைக்கான நிரல் 1இல் பின்னிணைப்பு 11 "காணியும் காணிக்குடியேற்றமும்" என்ற தலைப்பில் அரச காணி பராதீனப்படுத்துதல் பகிர்தல் நிர்வகித்தல் கட்டுப்படுத்தல் பயன்படுத்தல் என்பன பற்றி விபரிக்கப்பட்டுள்ளது.

அரச காணியின் உரித்து இலங்கைக் குடியரசிடமே தொடர்ந்தும் இருந்து வர வேண்டும் எனக்கூறும் 13வது திருத்தச் சட்டப் பின்னிணைப்பில் அரசியலமைப்பின் உறுப்புரை 33 இல் குடியரசின் பொது இலச்சினையை பாவிக்கும் தத்துவத்தை கொண்டுள்ள சனாதிபதியினால் காணிக் கையளிப்புகளுக்கும் காணி வழங்கல்களுக்குமாக கூறப்பட்டுள்ளவற்றிற்கும் மற்றும் அரச காணி சம்பந்தமாக ஏற்கெனவே ஆக்கப்பட்டுள்ள எழுத்திலான சட்டங்களுக்கும் அமைவாக கையாளப்படவேண்டும் எனவும் கூறுகின்றது.

அரசியல் அமைப்பு **பிரிவு 33 உபபிரிவு (ஈ) ச**னாதிபதி இலங்கைக் குடியரசின் பொது இலச்சினையை (Public Seal) வைத்திருப்பதற்கும் அதனைப் பாவித்து நிறைவேற்றக் கூடிய அரச உயர் நியமனங்களையும் மற்றும் குடியரசுக்கு உரித்தான காணி மற்றும் அசையாச் சொத்துக்களை அளிப்புச் செய்தல் (Grants) கையுதிர்த்தல் (Dispositions of lands) போன்ற சம்பந்தப்பட்ட காணிச்சட்டங்களினால் தேவைப்படுத்தப்பட்டதும் அதிகாரம் அளிக்கப்பட்டதுமான செயல்களையும் நிறைவேற்றலாம் எனக்கூறுகின்றது.

**மேற்கூறியவற்றிற்கு அமைவாகவும் பின்வரும் விசேட ஏற்பாடுகளுக்கு அமைவாகவும் காணி என்பது மாகாண சபை விடயமாக இருத்தல் வேண்டும் எனக்கூறுகின்றது.**

## 1. அரச காணி (State Lands)

1. அரசாங்கம் தனது நோக்கங்களை செயற்படுத்துவதக்காக ஒரு மாகாணத்தில் ஒதுக்கிய (Reserved) விடயத்தேவையொன்றுக்கு அல்லது ஒருங்கியை (Concurrent) விடயத்தேவையொன்றுக்கு அரச காணியொன்று (மத்திய) அரசாங்கத்தினால் தேவைப்படும் போது அவ்விடயத்தை ஆளுகின்ற ஏற்கெனவேயுள்ள காணி சம்பந்தமான நியதிச்சட்டங்களுக்கு அமைவாக மத்திய அரசால் அரச காணி பயன்படுத்தப்படலாம் என்றாலும் அதன்போது அவ்வாறு பயன்படுத்துதல் பற்றி சம்பந்தப்பட்ட மாகாண சபையுடன் கலந்து ஆலோசித்தல் வேண்டும் எனக் கூறுகின்றது.

2. மாகாண சபைக்கு பொறுப்பளிக்கப்பட்ட (Devolved) விடயமொன்றுக்கு ஒரு மாகாண சபையினால் தேவைபடுத்தப்படும் மாகாணத்திலுள்ள அரச காணியை அம்மாகாண சபைக்கு கிடைக்கக்கூடியதாக மத்திய அரசு விடுவித்தல் (Release)

செய்தல் வேண்டும். அவ்வாறு மாகாண சபைக்கு விடுவிக்கப்பட்ட அக்காணிகளை மாகாண அரசு காணி சம்பந்தப்பட்ட நியதிச் சட்டங்களுக்கு அமைவாக நிர்வகித்து கட்டுப்படுத்தி பயன்படுத்தி வரவேண்டும்.

3. எவராவது ஒரு பிரசைக்கு அல்லது ஒரு சங்கத்திற்கு ஒரு அரச காணி தேவைப்பட்டு அதற்கு விண்ணப்பிக்கப்படும் போது அதற்கான அரச காணியை பராதீனப்படுத்துதல் அல்லது கையுதிர்த்தல் அதற்கு ஏற்ற காணிச் சட்டங்களுக்கு அமைவாகவும் சம்பந்தப்பட்ட மாகாண சபையின் ஆலோசனையுடனும் சனாதிபதியினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

**2. மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசன மற்றும் காணி அபிவிருத்திச் செயற் திட்டங்கள் (Inter Provincial irrigation & Land Development schemes )**

1. **அத்தயை செயற்திட்டங்களாவன:**

(அ). அம்மாகாணத்துக்குள்ளாக மத்திய அரசினால் ஆரம்பிக்கப்பட்டனவும் ஒன்றுக்கு மேற்பட்ட மாகாணங்களுக்கூடாகப் பாயும் ஆறுகளிலிருந்து பெறப்பட்ட நீரை பயன்படுத்துவனவுமான நீர்ப்பாசன மற்றும் காணி அபிவிருத்தித் திட்டங்களை உள்ளடக்கும்.

எந்த ஒரு மாகாண சபையும் அத்தகைய ஆறுகளிலிருந்து நீரைப் பயன்படுத்தி நீர்ப்பாசன அல்லது காணி அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக்கலாம். இவையும் இத்திட்டங்களுக்குள் அடங்கும்.

(ஆ). மாகாணத்துக்கு வெளியேயுள்ள நீர்த்தொகுதிகளிலிருந்து திசை திருப்புவதின் மூலம் பெற்ற நீரைப் பயன்படுத்தும் மாகாணத்துக்குள்ளாக இருக்கும் நீர்ப்பாசன மற்றும் காணி அபிவிருத்தி செயற்திட்டங்களையும் உள்ளடக்கும்.

(இ). மகாவலி அபிவிருத்தித் திட்டம் போன்று அதன் முக்கிய இடப்பரப்பு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாகாணங்களுக்குள் வரும் எல்லாத் திட்டங்களையும் உள்ளடக்கும்.

2. **"இச் செயற்திட்டங்கள் யாவும் இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பாக இருக்கும்."** எனக் கூறுகின்றது. **அதாவது மாகாண அதிகாரத்திற்குள் வராது மத்திய அரசின் நிர்வாகத்தினால் செயற்படுத்தப்படும்.**

3. **காணி பராதீனப்படுத்தும் கூறு (வைத்திருக்கப்படும் அளவு) (Size of holding)**

மேற்கண்ட மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசன மற்றும் காணி அபிவிருத்திச் செயற் திட்டங்கள் மூலம் உருவாக்கப்படும் கமத்தொழிலுக்கான மற்றும் குடியிருப்புக்கான காணிகளின் பராதீனப்படுத்தும் கூறு (Unit of alienation) வைத்திருக்கக்கூடிய காணிப் பிரமாண அளவு தொடர்பான நெறிகளும் கோட்பாடுகளும் மாகாண சபையின் ஆலோசனையுடன் மத்திய அரசு தீர்மானிக்கும்.

4. காணியற்றவர்களின் எண்ணிக்கை விண்ணப்பிப்பவர்களின் வருமானம் குடும்ப அங்கத்தவர்கள் எண்ணிக்கை அவர்களின் விவசாய முயற்சியில் அறிவு போன்றவை உட்பட குடியிருப்பாளர்களை தெரிவு செய்யும்போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய

கோட்பாடுகள் பற்றி மத்திய அரசால் தீர்மானிக்கப்படும். **தீர்மானிக்கப்பட்ட கோட்பாடுகளை அதன்படி கடைப்பிடித்து காணியை பெறத்தகுதியானவர்களை தெரிவு செய்தலும் அதனோடு தொடர்புபட்ட இடைநேர்விளைவான கருமங்களைச் செய்தலும் மாகாண சபையின் அதிகாரத்திற்கு உட்பட்டனவாக இருக்கும்.**

5. அத்தகைய திட்டங்களில் காணிகளை குறித்தொதுக்கிப் பகிரப்படும்போது ***தேசிய இன விகித அடிப்படையில்*** இடம்பெற வேண்டும். அவ்வாறு காணி பகிரப்படும்போது ***அச்செயற்திட்டம் உருவாக்கத்தின் மூலம் காணியை இழந்தவர்களுக்கு முதலிலும் பின் சம்பந்தப்பட்ட மாவட்டத்திலுள்ள காணியற்றவர்களுக்கும் பின்னர் மாகாணத்திலுள்ள காணியற்றவர்களுக்கும்*** என்ற அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்படல் வேண்டும்.

6. அத்தகைய ஏதேனும் திட்டத்தில் ஏதேனும் சமூகத்தைச் சார்ந்தவர்கள் தமக்கென குறித்ததொதுக்கப்பட்ட காணிகளை பெற முடியாதிருப்பின் அவர்கள் அத்தகைய வேறு திட்டத்தில் சம அளவிலான குறித்தொதுக்கல்களை பெற்றுக்கொள்ளுவதற்கு உரித்துடையவர்களாவார்கள். இவ்வாறு கொடுபட்ட காணிகளில் ஒரு பகுதியளவுக் காணியை ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் திருத்தப்பட்டு பயன்படுத்தப்படவேண்டும்.

7. மேற்சொன்ன கோட்பாடுகளின் அடிப்படையில் அத்தகைய செயற்திட்டங்களில் ***காணிகளை பகிரும்போது அம்மாகாணத்தின் குடிநிலைப் புள்ளியியல் அமைப்பைப் பெருமளவில் பாதிக்காத விதமாகவும் மனித குடியிருப்புக்களில் சமுதாய ஒட்டுறவை உறுதிப்படுத்தக் கூடியதாகவும் இயலக்கூடியவரை செயற்படுத்தப்பட*** வேண்டும்.

8. **மேற்கூறிய செயற்திட்டங்களின் நிருவாகமும் முகாமையும் மத்திய அரசால் செய்யப்படும்.**

**தேசிய காணி ஆணைக்குழு (National Land Commission)**

1. அரச காணிகளின் பயன்பாடு தொடர்பாக தேசிய கொள்கையொன்றை உருவாக்குவதற்கு பொறுப்புடையதாயிருக்க அரசாங்கத்தால் **தேசிய காணி ஆணைக்குழு** ஒன்று தாபிக்கப்படும். இந்த ஆணைக்குழு தீவின் சகல மாகாண சபையினதும் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாக இருக்கும்.
2. தேசிய ஆணைக்குழுவிற்கு தொழினுட்பச் செயலகம் ஒன்றிருக்கும். இயற்கை மூலவள முகாமைக்கு ஏற்ற பௌதிக மற்றும் சமூக பொருளியல் காரணிகளை மதிப்பீடு செய்வதற்கு தேவைப்படும் இயைபான அறிவுத்துறைகளை இது பிரதிநிதித்துவப்படுத்தும்.
3. காணிப் பயன்பாடு (Land Use) மீதான தேசிய கொள்கை அரசியல் அல்லது இனவாரி அம்சங்கள் அல்லாத தொழினுட்ப அம்சந்தகை அடிப்படையாகக் கொண்டிருக்கும். மண்வளம் காலநிலை மழை வீழ்ச்சி மண் அரிப்பு காட்டுவனப்பு சுற்றாடல் காரணிகள் பொருளாதார நிலைப்பாடு முதலியவற்றை கருத்தில் கொண்டு காணிப் பயன்பாடு தொடர்பான பொதுக் கோட்பாடுகளை ஆணைக்குழு வகுக்கும்.
4. மாகாண சபைகள் அவற்றிற்கு அளிக்கப்பட்ட தத்துவங்களை பிரயோகிக்கையில் அத் தத்துவங்கள் தேசிய ஆணைக்குழுவினால் உருவாக்கப்பட்ட தேசிய கொள்கையை கருத்திற்கொண்டு மாகாண சபையினால் பிரயோகிக்கப்படல் வேண்டும்.

இவைகள் மட்டுமே 13ம் திருத்தத்தில் காணப்படும் காணி அதிகாரங்களாகும்.

அரச காணி தொடர்ந்தும் குடியரசின் உரித்தாக இருக்குமென்று கூறப்படுகின்றது. ஆனால் ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் இக்காணிகள் முடிக்குரிய காணி (Crown Land) எனப்பட்டது. இலங்கையிலுள்ள காணிகளில் பெரும்பாலானவை காடுகளாக காணப்படுகின்றது. இக்காணிகள் வன திணைக்களத்திற்கு ஒதுக்கப்படடுள்ளது. அக்காடுகளை பராமரிக்கும் அதிகாரியாக வன காப்பாளர் (Conservator of Forests) நியமிக்கப்பட்டுள்ளார். மீதிக் காணிகளில் தனிப்பட்டவர்களுக்கு சொந்தமான காணிகளையும் (Private Lands) ஆறு குளம் ஏரி போன்றவற்றையும் அவற்றிற்காக விடப்பட்ட ஒதுக்குக் காணிகளையும் (Reservations) கழித்து மீதியானவை அரச காணிகளாக காணி ஆணையாளர் நாயகத்தின் பாதுகாப்பிலுள்ளது. (Custodian of state lands). உத்தியோக ரீதியாக காணி அமைச்சு காணிகளின் மேல் சனாதிபதியின் சார்பில் உரித்தைக் கொண்டுள்ளது. அரசாங்க திணைக்களங்களுக்கோ (கைமாற்றல்) (Handing over) அல்லது உள்ளூராட்சி சபைகளுக்கோ (உரித்தளித்தல்) (Vesting) தேவைப்பட்ட காணிகளை காணி ஆணையாளர் நாயகத்திடமிருந்தே பெறவேண்டும்.

அதே போன்று 13ம் திருத்தச் சட்டத்தின்படியும் மாகாணத்திற்கு பொறுப்பளிக்கப்பட்ட விடயத்துக்கு (Devolved Subject) தேவையான காணிகளை விடுவித்துப் பெறவும் ( Release ) காணி ஆணையாளர் நாயகத்திடமிருந்தே பெற்றுக் கொள்ளவேண்டும். ஒதுக்கிய விடயத்திற்கும் ஒருங்கியை விடயத்திற்கும் மத்திய அரசே காணியை தானாக ஒதுக்கிக்கொள்ளும். மாகாண சபையின் ஆலோசனை மட்டுமே பெறப்படும்.

மாகாணங்களுக்கிடையிலான நீர்ப்பாசன காணி அபிவிருத்தித் திட்டங்களைப் பொறுத்தளவில் மத்திய அரசு கூறும் கோட்பாடுகள் நெறிமுறைகள் அறிவுறுத்தல்களை அனுசரித்து செயற்பட ண்டியது மட்டுமே மாகாண சபையின் வேலையாகவிருக்கும்.

ஒரு பிரசைக்கு அல்லது ஒரு குழுமத்திற்கு தேவையான காணியை வழங்கும்போது மாகாண சபையின் அதிகாரம் அதற்கான சிபாரிசு அறிக்கையை மத்திய அரசுக்கு கொடுப்பதோடு முடிவடைந்துவிடும்.

தேசியக் காணி ஆணைக்குழு தீவின் சகல மாகாண சபைகளையும் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் அமைக்கப்படும். அவ்வாணைக்குழுவால் உருவாக்கப்படும் தேசிய கொள்கையின் அடிப்படையிலேயே மாகாண சபைகள் காணிக் கொள்கையை வகுத்து செயற்படவேண்டும்.

(தொடரும்)